# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 100/2019**

**Deposition of Witness for PW1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ஈஸ்வரி | Caste | : |
| Father/Husband Name | : | முத்தையா | Calling | : |
| Village | : | கின்னிமங்கலம் | Religion | : |
| Taluk | : | | Age | : |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.05.2026**

**முதல்விசாரணை**

நான் தற்போது கின்னிமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரி எனது கணவர் ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். நான் கடந்த 2015ம் ஆண்டு எதிரி மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரி மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நான் எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை :**

என்னுடைய கணவரான எதிரி சில காலமாக எனது குடும்பத்தினை கவனிக்காமல் குழந்தைகளின் படிப்பு செலவிற்கு பணம் கொடுக்காமல் இருந்து வந்தார் என்றும், இந்நிலையில் கடந்த 26.12.2015ம் தேதி பகல் சுமார் 11 மணியளவில் எனது கணவர் கொக்குளத்தில் இருக்கிற தகவல் தெரிந்து அங்கு சென்று கேட்டபோது அவர் என்னை பார்த்து

அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றும், எனது கழுத்தைப் பிடித்து கீழே தள்ளிவிட்டு கம்பால் வலது கையில் அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றும், அப்போது அருகில் இருந்த சாட்சிகள் சண்டையை விலக்கிவிட்டபோது எதிரி கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டு, எதிரிக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டு, சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமாதான மனு **(எ.த.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.05.12 11:11:36 +0530